முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் கலைக்கோட்டு முனிவர் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

06.03.2019, புதன்கிழமை

1. **தவஞானியே ஆறுமுக அரங்கா**
**தலைவனே அண்ணலே தேசிகா**
**புவனமதில் உன் பெருமை கூறி**
**புகலுவேன் நித்ய பிரசன்ன ஆசியை**

2. ஆசியை **விளம்பி சாலின் திங்கள்**
**அறிவிப்பேன் இருபானீர் திகதி புந்தி வாரம்**
**(விளம்பி வருடம் மாசி மாதம் 22ம் நாள் 06.03.2019, புதன்கிழமை)**
**பேசிடவே கலைக்கோட்டு முனிவர் யானும்**
புகலுவேன் உலகோர் நலம் பெற

3. நலம் தரும் ஆறுமுக அரங்க ஞானி
நன்மை செய்யும் சக்தியாகி
பலம் கூட்டி அன்னதானம் பெருக்கி வர
பணிந்து மக்களெல்லாம் வருகை தந்து

4. தந்துமே பிரணவக் குடிலை
தரிசித்து அரங்க மகானிடம்
சிந்தை குளிர தீட்சை ஏற்று
செப்பிடுவேன் தொடர்ந்து வர

5. வருகவே மக்களுக்கு மாற்றமும்
வந்தடையும் சர்வவகை ஏற்றமும்
முருகாயென செபதபத்தில் இருக்க
முழுமையான பாதுகாப்பு பெருகும்

6. பெருகவே மக்களிடை தனவளமும்
பொருள் வளமும் கூடி நின்று
வருமுலகில் கலியுகம் தேறும்
வளர்ச்சியும் மேன்மையும் காணும்

7. காணவே தலைவா முருகா என
கலியுக மக்கள் எல்லா திக்கிலும்
ஞானமாக சர்வ சூட்சுமமாக
நானிலத்தில் புகழ் பரப்பி வர

8. வருகவே சமூக சீர்கேடுகள்
வடிவேலன் அருளால் விலகி
தருமபலம் பெருக வளரவே
தரணியே சமதர்ம சமத்துவ

9. சமத்துவ சன்மார்க்க வழிகளாக மாறி
சர்வ உலகும் அமைதி பெறும்
நேமமுடன் நோய்கள் துன்பமிலா
நிலவுலகோர் ஆரோக்கியம் பாதுகாப்பு பலம்

10. பலம் கூடி ஞானவான்களாக
பரிபக்குவம் தேறி சிறப்பர்
வளம் கூடி வாழ்வின் தேவைகள்
வல்லமைபட சிறக்க வேண்டுமா
11. வேண்டியே அரங்க ஞானியை நோக்கி
விடாது தொடர்ந்து வருக
தொண்டர்களாகி எல்லா மக்களும்
தெய்வீக ஞானவாழ்வு பெறுவர் நித்ய பிரசன்ன ஆசி முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் கலைக்கோட்டு முனிவர் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூலின் சாரம் :**

அளவிலாது தவங்கள் செய்து வெற்றி கண்டிட்ட தவராசனே ஆறுமுக அரங்கமகா தேசிகனே ஞானத்தலைவனே அண்ணலே ஞானதேசிகா அற்புதமான உமது பெருமைகளை உலகறியக் கூறியே உலக நலம் கருதி **விளம்பி வருடம் மாசி மாதம் 22ம் நாள் 06.03.2019, புதன்கிழமையான** இன்றைய தினமதனிலே நித்ய பிரசன்ன ஆசி நூல்தனையே கலைக்கோட்டு முனிவர் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் கலைக்கோட்டு முனிவர்.

சர்வ நலங்களையும் தந்தருள்கின்ற ஆறுமுக அரங்கமகா தேசிக ஞானி உலகின் எல்லா உயிர்களுக்கும் நன்மை தருகின்ற மகா சக்தியாக மாறி உலகிற்கு தர்மபலம் பெருக்கி அளவிலாது அன்னதானங்களை செய்து வருகின்றார். தர்மபலம்மிக்க கலியுக மகா ஞானி ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் திருவடி பணிந்து மக்களெல்லாம் வணங்கிட அவரவரும் ஏழாம் படை வீடு துறையூர் ஓங்காரக்குடிலினை நாடி வந்து ஆறுமுக அரங்கமகா தேசிகனாரிடத்து அரங்கன் மனம் மகிழும்படி நடந்து தீட்சை உபதேசம் ஏற்று அரங்கமகா தேசிகனாரின் உபதேச வழி தொடர்ந்து நடந்துவர, மக்களுக்கு நல்ல மாற்றங்கள் வந்தடையும் சர்வவகையிலும் நல்ல முன்னேற்றங்கள் உண்டாகும்.

முருகா, முருகா, முருகா என்றே அவரவரும் மனம் உருகி ஜெபதபங்களை தொடர்ந்து செய்து வரவர, முழுமையான அருள் பாதுகாப்பு பெருகிடும். மக்களிடையே பொருளாதார மேன்மை உண்டாகி பொருள் சேர்க்கையும் அதிகமாகி இந்த கலியுகம் தேர்ச்சியடையும் கலியுகமே நல்ல வளர்ச்சியும் தேர்ச்சியும் அடைந்து சிறப்படையும்.

ஞானத்தலைவன் முருகப்பெருமானை அவரவரும் ஞானத்தலைவனே முருகா, முருகா என்றே கலியுக மக்கள் எல்லாம் உலகின் எல்லா திசைகளிலும் ஏற்று பூஜை செய்து வருவதுடன் பிறரையும் முருகப்பெருமானை வணங்கிடும்படி ஞானமாக சர்வ சூட்சுமமாக முருகப்பெருமானின் புகழினை பரப்பிவர, உலகெங்கும் முருகப்பெருமானின் புகழ் பரவி, முருகப்பெருமானின் நாம ஒலிகள் பரவி, உலகினில் உள்ள சீர்கேடுகள் எல்லாம் முருகப்பெருமானின் அருளினால் விலகி, உலகினில் தருமபலம் பெருகும். உலகினில் தருமபலம் பெருக பெருக, உலகமே சமதர்ம சமத்துவ உலகமாக பேதாபேதங்கள் எல்லாம் அற்றுப்போய் உலகமெங்கும் உண்மை நெறியான சன்மார்க்க நெறி பரவி, மக்கள் சன்மார்க்க நெறிப்படி நடந்து சர்வ உலகமும் அமைதி பெறும். உலக மக்களுக்குள் நட்பு பெருகிடும், நோய்கள் துன்பங்கள் இல்லாத சூழ்நிலை உருவாகி ஆரோக்கியம் பெருகி அருள் பாதுகாப்பு பலமும் பெருகிடும்.

முருகப்பெருமானை வழிபட்டவர் எல்லாம் அருள்பலம் பெருகி, ஞானவான்களாக பரிபக்குவம் பெற்று கடைத்தேறி சிறப்படைவார்கள். வளம் பெருகி வாழ்க்கையின் தேவைகளெல்லாம் பூர்த்தியாகி வல்லமைபட சிறப்படைவார்கள்.

உலக மக்களே உங்களது வாழ்வின் தேவைகள் பூர்த்தியாக வேண்டுமா? வல்லமைகள் பெருகி சிறப்படைய வேண்டுமாயின் உலகமகா ஞானகுரு ஆறுமுக அரங்கமகா தேசிகனாரை நோக்கி இடைவிடாது தொடர்ந்து வந்து தரிசனம் பெறபெற, அரங்கதரிசனம் பெற்ற அவரெல்லாம் அரங்கனின் தொண்டர்களாக ஆகி தெய்வீக ஞானவாழ்வினை பெற்று சிறப்படைவார்கள் என தமது நித்ய பிரசன்ன ஆசி நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் கலைக்கோட்டு முனிவர்.

–சுபம்–